மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

அசல் வழக்கு எண். 212/2019.

பெயர் : செல்லத்துரை P.W.2.

த/பெ. : கிருஷ்ணசாமி

தேதி : 11.03.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:–

சாட்சியம் சொல்வதற்கு எனக்கு அழைப்பாணை வந்தா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் நிர்வாகத்தில் உள்ள ஜெம்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தில், பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் திருக்கடையூர் மெயின் ரோட்டில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ராஜங்கம் என்பவரின் மகன் மாயக்கிருஷ்ணன் என்பவர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்பதையும், அவருக்கு சொந்தமான புஞ்சை நிலத்தை வாய்மொழி குத்தகையாக எந்த ஆண்டு, யாரிடமிருந்து நான் வாங்கினேன் என்ற விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். மாயகிருஷ்ணன் தற்போது உயிருடன் இல்லை. அவர் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

நான் மாயகிருஷ்ணனின் மனைவியிடமிருந்து வாய்மொழி குத்தகையாக புஞ்சை நிலத்தை பெற்று சுமார் 8 வருடங்களாக குத்தகை சாகுபடி செய்துவருகிறேன். தாவா சொத்தில் சர்ச் உள்ளது. சர்ச் அருகில் வாதியின் வீடு உள்ளது. தாவா சொத்தில் உள்ள சர்ச்சின் பின்புறம் பிரதிவாதி ஆர்.சி.சி. கட்டிடம் கட்டி அதில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஈசாத் பாலகுரு மேற்படி சர்ச்சில் போதகராக எத்தனை வருடங்களாக இருந்தார் என்றால் அவர் போதகராக எந்த காலத்திலும் இல்லை. மேற்படி சர்ச்சில் போதகராக பணிபுரிந்த பிரதிவாதியை வாதியின் நிறுவனம் அவரது தவறான செயலுக்காக அவரை பணிநீக்கம் செய்து 2017 ஆம் வருடம் திருச்சபையை பூட்டி வாதியின் பொறுப்பில் சாவியை ஒப்படைத்தது என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டு வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே திருச்சபை நடக்கும்போது பிரச்சனை ஏற்பட்டு அது

சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

மாயகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட புஞ்சை நிலத்தை இதுநாள் வரை நான் தான் குத்தகை பயிர் செய்து வருகிறேன். மாயகிருஷ்ணனின் புஞ்சை நிலத்தை மயிலாடுதுறையைச் சேர்ந்த ராமமூர்த்தி என்பவர் தான் 20 வருடங்களாக பயிர் செய்து வருகிறார் என்றாலும், நான் கடந்த 8 வருடங்களாக பயிர் செய்து வருகிறேன் என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.